**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,**
(Pension Pay Office பின்புறம்),
**நந்தனம், சென்னை- 600 035. தொலைபேசி எண். 044-29515590**

**ஆணை நாள் 07.07.2025**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப. (ஓய்வு),**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 16927/E/2023 & SA 9384/E/2023**

திரு ல.முருகன்
திருமதி ல.நாகரத்தினம் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
தேனி வட்டம், தேனி மாவட்டம்

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 04.02.2025 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து தேனி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு கூ.மாரிமுத்து இவ்வாணையத்தில் 29.04.2025 அன்று ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2) அவ்வறிக்கையில், ஆணையத்தின் உத்தரவுபடி, 17.04.2025 அன்று தேனி வட்டாட்சியர் அலுவலகம் வந்து சட்டப்பிரிவு 2(j)-ன் கீழ் ஆவணங்களை பார்வையிடுமாறு மனுதாரர்களுக்கு 04.04.2025 அன்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் அத்தேதியில் மனுதாரர்கள் வரவில்லை என்றும், இருப்பினும் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டு கோரிய தேனி வட்டம், அல்லிநகரம் கிராமம், புல எண்.774 பதிவுள்ள அடங்கல் நகல்கள் - 1374, 1384, 1391, 1394, 1395, 1396, 1397, 1399, 1400, 1401, 1403, 1404, 1406, 1411, 1412, 1413, 1414, 1417, 1418, 1419, 1420, 1423, 1424, 1425, 1427, 1428 ஆகிய பசலி ஆண்டுகளுக்கான பதிவேடுகள் 25.04.2025 அன்று பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அதன் நகலும், தபால் துறையின் இரசீதும் இணைக்கப்பட்டிருந்தது.

3) தேனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று ஆவணங்களை களஆய்வு செய்வதற்கு மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள அவர்கள் தவறிவிட்டனர். எனவே, இந்த இரண்டு மேல்முறையீட்டு மனுக்களையும் இத்தோடு முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 16927/E/2023 & SA 9384/E/2023**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
தேனி வட்டம், தேனி மாவட்டம்

திரு ல.முருகன், த/பெ லட்சுமணன்,
242/12, வடக்கு காலனி, ஐ.சி.எப்
சென்னை -600 038

Copy to File
CR/PA